www.tamilarangam.net

# தமிழ்ப் போராளிகளா? பயங்கரவாதிகளா?

**எம்.வசந்தகுமார் (பிரான்ஸ்)**

தமிழ்த் தேசிய' விடுதலைப் போராளிகள், விடுதலைக்குழுக்கள், புனிதப்போராளிகள், தியாகிகள் என்று பல்வேறு திருநாமங்களால் அழைக்கப்படும் இவர்களுக்கும் மேற்படி அப்பெயர்களுக்கும் சம்பந்தமுள்ளதா? சில முற்போக்குவாதிகளும் தேசிய முதலாளியத்தின் வளர்ச்சியானது அராஜகத்துடனும் இனவெறியுடனும் தொடர்புடையது என்னும் மாபெரும் உண்மையை கண்டுபிடித்து வெளியிட்டிருக்கிறார்கள்.

**தமிழீழக் கோரிக்கையும் அதன் பொய்மையும்**

தமிழ் மொழிப் பற்றும் தேசப்பற்றும் மிக்க எமது முன்னோர்களால் எழுப்பப்பட்டதே இந்தத் தமிழீழக் கோரிக்கை. ஆங்கிலேயன் எமது தேசத்தை ஆட்சி செய்த காலத்தில் ஆங்கிலம் படித்து ஆங்கிலேயனிடம் அடிமைச் சேவகம் புரிந்து தமது தமிழீழப் பற்றை இவர்கள் காட்டிய விதத்தை, தமது பிள்ளைகளை வெளிநாட்டிற்கு அனுப்பி லண்டனிலும் அமெரிக்காவிலும் தமிழ் பல்கலைக்கழகங்களில் தமிழ் படிக்க வைத்த பக்தியையும் நாம் எங்ஙனம் மறக்க முடியும்? இன்னும் தமிழினத்தலைவர் அறிவுமேதை சட்டவல்லுனர் பொன்னம்பலம் (இவர் செய்த தொழில் உண்மையில் கொலை, கொள்ளை போன்றவற்றை செய்த குற்றவாளிகளை தனது நுண்ணறிவால் சட்டத்தின் தண்டனையில் இருந்து காப்பாற்றியது தான்) தந்தையின் வழியை அப்படியே கடைப்பிடித்து காப்பாற்றி வரும் மகன் குமாரும் தமிழ்ப் பற்று மிக்கவர். இவர் பேசும் மழலைத் தமிழைக் கேட்டால் உடம்பெல்லாம் புல்லரிக்கும். இப்படியான பெருமை ர்மிக்கவர்கள் தான் எம் தமிழ் தலைவர்கள். அது சரி, எமது வீரத்தமிழர்கள் ஆங்கிலேயனின் ஆட்சிக் காலத்தில் தமது பாரம்பரிய பிரதேசம் வட கிழக்கில் எங்காவது ஒரு கலகம்? ஒரு சிறு துப்பாக்கிச் சூடு ஆங்கிலேயன் மீது நடந்ததா? ஒரு சுபாஷ் சந்திரபோஸ் போல் ஒரு தம்பி? மகாத்மா காந்தியைப் போல் திலீபன்? கடைசி ஒரு உண்ணாவிரதமாவது? என்னே தமிழ்ப் பற்று. ஆங்கிலேயரின் வாலுக்குப் பின்னால் திரிந்த மேட்டுக்குடியினர் தான் பிற்காலத்தில் தமிழ் சமூகத்திற்கும் சிங்களவர்களும் தலைவர்களாக விளங்கினர். சிங்கள மொழிப்பற்றும் தமிழ் மொழிப்பற்றும் இவர்களால் மொழிப்பற்றை மறந்திருந்த மக்களுக்கு ஊட்டப்பட்டது.

தமிழீழக் கோரிக்கையின் அடிப்படைக் காரணம் தனிச்சிங்களச் சட்டம், தரப்படுத்தல். தமிழ் தலைவர்கள் தமது பிள்ளைகள் இலங்கையில் தமது பிள்ளைகள் படித்தால் இன்னொரு தமிழ் மாணவனின் வாய்ப்பு பாதிக்கப்படும் என்று லண்டனுக்கும் அமெரிக்காவிற்கும் தமிழ் படித்து புலமை பெற அனுப்பி வைத்தார்கள். ஆங்கில அரசாட்சியினால் உருவாக்கப்பட்ட நடுத்தர வர்க்கத்தின் பிள்ளைகள் பல்கலைக்கழகம் போக முடியவில்லை என்றதும் வீரம் பொங்கியது. எழுபதுகளின் ஆரம்பத்தில் 12ம் வகுப்புப் படித்த மாணவர்கள் தமிழ் மாணவ சமூகத்தில் .5 வீதம் கூட இல்லை. படிக்க வசதி இல்லாதோரும் படிப்பை பாதியில் நிறுத்திக் கொண்டோருமே 90 வீதத்திற்கு மேல். அப்படியாயின் அவர்கள் கேட்டிருக்க வேண்டியது என்ன?

அடிப்படைக் கல்வி வசதியை ஏற்படுத்தும் வகையில் ஆரம்பப் பாடசாலைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்திருக்க வேண்டும். அன்றெல்லாம் மற்றத் தமிழ்ச் சகோதரனைப் பற்றி சிந்திக்கத் தெரியவில்லை. எத்தனை தாழ்த்தப்பட்ட மக்களின் எலும்புகள் உடைக்கப் பட்டன? வீடுகள் கொழுத்தப் பட்டன? இவற்றையெல்லாம் சிங்களவர்களா செய்தார்கள்? எத்தனை கூலி விவசாயப் பெண்கள் தமிழ் வீரர்களால் கற்பழிக்கப்பட்டார்கள்? அடி விழுந்தவுடன் பாசம் பொத்துக் கொண்டு வருகிறது. தமிழச்சியைத் தமிழன் தான் கற்பழிக்க வேண்டும். சிங்களவன் கற்பழித்ததும் தமிழிச்சி சகோதரி ஆகி விடுகிறாள்.

தமிழீழம் என்பது தமிழீழக் கோரிக்கை எழுப்பப்பட்ட போது அனைத்து தமிழ் மக்களின் பிரச்சனையாக இருக்கவில்லை. படிக்கவே தெரியாதவனை மொழிப்பிரச்சனை எவ்விதம் பாதிக்கும்? ஆனால் இராணுவத் தாக்குதல் வளர்ச்சி அரச பயங்கரவாதத்தின் வெறித்தனம் ஆகியன இன்று அனைத்து தமிழ் பேசும் மக்களின் உயிர்ப்பிரச்சனை ஆகி விட்டிருக்கின்றன. இதற்கு சரியான தீர்வு தமிழீழமா? தமிழீழம் வந்தால் அனைத்து தமிழ் மக்களும் பட்டதாரியாகி விடுவார்களா? இப்போதே புலிகளால் தமக்கு முரணான கருத்துக்கள் கொண்ட ஆயிரக்கணக்கானோர் கொலை செய்யப்பட்டுள்ளனர். யாருமே வாயைத்திறந்து சரி பிழை கதைக்க முடியாத நிலை. சிங்களவனிடம் அடிவாங்குவதில் இருந்து தப்பி தமிழனிடம் பழையபடி அடி வேண்ட வேண்டுமா? தமிழீழம் கிடைத்தால் தமிழில் பேசலாம். படிக்கலாம். அடக்குமுறைகள் நின்று விடுமா? அப்படியானால் தமிழீழம் வேண்டாமா? (நீ ஒரு தமிழ் துரோகி)

இன்றைய நிலையில் தமிழீழம் என்பது தவிர்க்க முடியாத அவசியமாக தமிழ் பேசும் மக்களின் வாழ்வுப் பிரச்சனையாக சிங்கள, தமிழ் அரசியல் வாதிகளால் (துப்பாக்கி தூக்குபவர்களையும் சேர்த்துத் தான்) ஆக்கப்பட்டுள்ளது.தமிழ் மக்களின் பிரச்சனை மொழி மட்டும் தான். உணவு, உடை, இருப்பிடம் என்பது அல்ல என அரசியல் வாதிகளால் உருவாக்கப்பட்ட நிலை.

மொழி, இன அடிப்படையில் எதிரியின் அரச பயங்கரவாதம் அதிகரித்திருப்பதால் அந்த ரீதியில் தான் தமிழ் மக்கள் போராட வேண்டியிருக்கிறது. ஆனால் அது எண்ணெய்ச்சட்டியில் இருந்து தப்பி எரிதணலுக்குள் விழுகிற கதையாக இருக்கக் கூடாது. இனமொழி அடக்குமுறைகளுக்கு எதிராகப் போராடுபவர்கள் சுதந்திரம் என்பதை முழுமையாகப் பெற வேண்டும். மக்களின் அனைத்து பிரச்சனைகளும் தீர்க்கப்பட வேண்டும். இதற்குப் போராட்டத் தலைமை முதன் முக்கியமாக ஜனநாயகப் பண்புள்ளதாக இருந்தாக வேண்டும்.

மீண்டும் சாராம்சத்துக்கு வருவோம். தமிழீழக் கோரிக்கை என்பது அனைத்து தமிழ் பேசும் மக்களின் அடிப்படைப் பிரச்சனையாக இருக்கவில்லை. இன்று அப்படி ஆக்கப்பட்டுள்ளது. தவிர்க்க முடியாமல் இந்தச் சதியின் வலைக்குள் சிக்கியாக வேண்டியுள்ளது. தமிழ் மக்கள் எவ்வாறு இந்த வலையின் சிக்கலுக்குள் இருந்து மீண்டு தமது வாழ்வை சுதந்திரமுள்ளதாக அமைக்கப்போகிறார்கள் என்பது ஆண்டவனுக்கே வெளிச்சம்.

**தமிழீழக் கோரிக்கையும் அரசியல்வாதிகளும் அவர்களின் வாரிசுகளும்**

**போராளிகளா? கிரிமினல்களா?**

தமிழீழக் கோரிக்கையின் ஆரம்ப கர்த்தாக்கள், படித்த பெரிய மனிசர்களான பிரக்கிராசி, அப்புக்காத்துக்கள்,. இவர்களின் முழுநேரத் தொழில் கோர்ட்டிற்குச் சென்று கள்வனுக்கும் ஊழல் புரிபவனுக்கும் கொலை, கொள்ளை போன்ற தமிழ் மானம் காக்கும் வீரச் செயல்கள் புரிவோருக்கும் வக்காலத்து வாங்குவது. கள்ள உறுதி எழுதுவது, காணி அபகரிப்புகளுக்கு வக்காலத்து வாங்குவது போன்றன. இதில் பகுதி நேரம் தமிழீழ அரசியல், பாராளுமன்றத்தில் ஆசனம் கிடைத்தவுடன் அதைப் பயன்படுத்தி அள்ள முடிந்ததால் பகுதி நேரம் முழுநேரம் ஆயிற்று. தமிழ் மக்களும் தங்களுக்கு மாபெரும் அரசியல் தலைவர்கள் கிடைத்து விட்டதாக புளகாங்கிதமடைந்தனர். அந்தக் காலத்தில் இவர்களின் தொண்டர்களாகவும் சண்டியர் களாகவும் செயல்பட்ட தமிழ் இளைஞர் பேரவை உறுப்பினர்கள் பின்னாளில் போராளிகள் என்று அழைக்கப்பட்டனர். சிலர் வியாபாரத்தை வெற்றிகரமாக நடத்தினார்கள். சிலர் சிவபதமடைந்தனர்.

கூட்டணியின் காலத்தில் இன்னொரு புதிய தமிழ் தலைமையும் உதித்தது. கொள்கைக் குன்றம் குட்டிமணி, தங்கத்தலைவர் தங்கத்துரை. தமிழினத்துக்காக ஆயுதம் தாங்கி முதல் முதல் சிறை சென்ற செம்மல்கள். யார் இந்தக் கொள்கைக் குன்றம் குட்டிமணியும் தங்கத்துரையும்? கடத்தல்மன்னர்கள், பிரபல கேடிகள். பல கொலைகளைப் புரிந்தவர்கள். தமிழகத்திலும் இலங்கையிலும் பொலிசாரால் தேடப்பட்டவர்கள். (சீ. ஆர் சொன்னது தமிழ் போராளியள் எண்டாலெல்லே ஆமி பிடிச்சது) பிற்காலத்தில், இவர்கள் கடத்தலில் ஈடுபட்டது தமிழீழப் போராட்டத்தை ஆயுதமயப்படுத்துவதற்கென்று கொள்கை விளக்கம் வேறு. இந்தக் கும்பலுடன் இருந்தவர்கள் தான் இன்றைய தமிழினத்தின் தனிப்பெருந்தலைவர் தம்பி பிரபாகரன், தன்மானச் சிகரம் சிறி சபாரத்தினம்.

இவர்களுடன் இன்னுமொருவர் முக்கியமானவர். அவர் 'புதிய தமிழ்ப்புலிகள் அமைப்பின்' (பிரபா+உமா கூட்டு) ஆரம்பகர்த்தாவான செட்டி. சிறுவயதிலே தன்மானம் காக்க பல குற்றச் செயல்கள்.. மன்னிக்கவும் வீரச்செயல்கள் புரிந்து சீர்திருத்தப் பள்ளிக்குச் சென்றவர். இவரும் குட்டிமணியும் தான் தனிப்பெரும் தலைவரின் குருவானவர்கள். உமா மகேஸ்வரன், சிறி சபாரத்தினம் போன்ற ஏனைய வீரத்தலைவர்களும் தூள் கடத்தி பல போராளிகளைக் கொன்று இவர்களுக்கு எவ்விதத்திலும் தாம் சளைத்தவர்கள் அல்ல என நிருபித்தார்கள்.

ஆகா! தமிழினம் தம் தலைவர்களை தேர்ந்தெடுக்கும் விதமே தனி. நினைத்தாலே மெய் சிலிர்க்கிறது. அன்று குட்டிமணியைக் கள்வன், கடத்தல் காரன் என்று கூறியிருந்தால் அந்த தமிழ்த்துரோகிக்கு தகுந்த தண்டனை கிடைத்திருக்கும். அதுபோல தனிப்பெருந்தலைவர் பற்றி இன்று ஏதாவது சொன்னால் முதல் பதில் தமிழ் துரோகி. சிங்கள அரசின் கைக்கூலி. ஏன் இவர்கள் தம் மீது வைக்கப்படும் குற்றச்சாட்டுகளுக்கு பதில் அளிக்க முடியவில்லை. விழுந்தடித்துப் பட்டமளிக்கிறார்கள். முற்பிறப்பில் பல்கலைக்கழகப் பேராசிரியர்களாக இருந்திருப்பார்களோ?

குட்டிமணி பிரபாகரன் கும்பலே தமிழீழப் போராட்டத்தில் முதல் உட்கொலைகளைச் செய்த பெயரைத் தட்டிக் கொண்டவர்கள். செட்டி முதல் களப்பலி. பிறகு பற்குணராசா, மைக்கல், இறை, உமா, தேவன்... ஆயிரக்கணக்கில் பட்டியல் தொடர்ந்தது. குட்டிமணியும் தங்கத்துரையும் இராணுவத்தால் சிறை பிடிக்கப்பட்டதே தமது சகபாடிகளால் தான். குட்டிமணியும் சிறையிலிருந்து தப்புவதற்கு தீவிரமுயற்சிகள் மேற்கொண்டிருந்தார். (தமிழினம் தலைவன் இல்லாமல் தவிக்குமல்லவா?) அப்போது விடுதலைப்புலிகள் என்ற அமைப்பு உண்டாகி விட்டது. உமா மகேஸ்வரன் பிரிந்து கழகம் அமைத்து விட்டார். பிரபாகரனுக்கு எந்த வித தாக்குதலும் செய்ய வேண்டாமென குட்டி மணி செய்தி அனுப்பியிருந்தார். ஆனால் அது புறக்கணிக்கப்பட்டு 83 இல் திருநெல்வேலித் தாக்குதல் நடத்தப்பட்டது. விளைவு குட்டிமணி கொலை செய்யப்பட்டார். ஆனால் ஒன்று மட்டும் உண்மை. குட்டிமணி சிறையில் இருந்து தப்பியிருந்தால் நிச்சயமாக இன்று குட்டிமணி தான் தலைவர். பிரபாகரன் அல்ல. மற்றவர்களை அழித்து பிரபாகரன் தமிழினத்திற்கு தனிப்பெரும் தலைமையை கொடுக்க வேண்டும் என்பதில் திடசங்கற்பம் உள்ளவர் என்பதால் இது நடக்கவில்லை.

அடுத்ததாக டெலோவிற்கு வருவோம். தமிழீழ விடுதலை இயக்கம் என அழைக்கப்பட்ட இந்த இயக்கத்தின் பெயர் மட்டுமே பின்பு சிறி சபாரத்தினம் குழுவினரால் வாங்கப்பட்டது. ஆரம்பத்தில் இந்த தமிழீழ விடுதலை இயக்கத்தில் முன்னாள் முதல்வர் வரதராஜப் பெருமாள் உட்பட கூட்டணி ஆதரவாளர்கள், இன்றைய ஈரோஸ், ஈ.பி.ஆர்.எல்.எஃப் உறுப்பினர்கள் ஆகியோர் இருந்தனர். தமிழீழம் அடைய வழி ஆயுதப் போராட்டமா? பாராளுமன்றமா? என்ற பிரச்சனையில் இவ்விடுதலை இயக்கம் பிளவுபட்டது. பிளவிற்கு முதல் அடித்த புலோலி வங்கிக் கொள்ளையின் பணத்துடன் யாழ்ப்பாணத்திலேயே சிலர் கடை திறந்தனர். இவ்வங்கியின் முகாமையாளராகக் கடமையாற்றியவர் யார் தெரியுமா? இன்றைய ஈரோஸ் பாலகுமார். இந்த இயக்கத்தின் பெயரையே பின்னாளில் சிறி சபாரத்தினம் தனது காடையர்



தாயகம்
(05.04.90)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கூட்டத்திற்கு சூடிக் கொண்டார். தமிழகத்தில் பிரபாகரன் குழுவினர் சிறிக்கு விசம் கொடுத்து கொல்ல நடந்த முயற்சி தோல்வியில் முடிந்தது.

இவ்வமைப்பில் சிறி கும்பலால் செய்யப்படும் அடாவடித்தனங்களை நிறுத்துமாறும் உட்கட்சி ஜனநாயக முறையை அமுல்படுத்துமாறும் கோரி மனோ மாஸ்டர் தலைமையில் ஒரு குழு பிரிந்தது. இக்குழுவில் சிலர் பிரபாகரனுடன் சேர வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தியதற்கு மனோ மாஸ்டர் எதிர்ப்பு தெரிவித்ததால் மனோ மாஸ்டர் நாட்டிற்கு திரும்பியதும் புலிகளால் கொல்லப்பட்டார். இக்குழுவில் பலருக்கு பிரபாகரன் நிபந்தனையற்ற ஆதரவு. அளித்தார். அடையாறு, பெசன்ட் நகரில் பெரிய வீடுகளும், உணவும் சமையல்காரிகளும் வழங்கப்பட்டன.

கடத்தல் கும்பலில் இருந்து உருவான இந்த இயக்கமும் கடத்தல் பற்றிய முன்னனுபவமும் சரியான ஆளுமையும் இல்லாததால் தமிழீழ வியாபாரத்தில் நிற்க முடியவில்லை. கடத்தல்காரர்களுக்கு இருக்கும் உறுதியும் சுயகட்டுப்பாடும் திடம், மனோவுறுதியும் விடுதலைப் போராளிகளுக்குக் கூட இருப்பதில்லை. தமிழகம் இவர்களின் சீரழிவிற்கு மேலும் வாய்ப்பாகியது. இந்திய அரசிற்கு இந்தக் காடைக் கும்பலை தமது அடிவருடிகளாக்கிக் கொள்வது வசதியாக இருந்தது. சாவகச்சேரி பொலிஸ் நிலையத் தாக்குதலின் பின் இவர்களுக்கு மக்கள் மத்தியில் செல்வாக்கு பெருகியது. தூள் கடத்தலில் வரும் பணம் இவர்களின் சுகபோக வாழ்க்கைக்கு உதவியது. பிரபாகரன் குழுவினரை அழிக்க சிறியும், சிறியை அழிக்க பிரபாகரன் குழுவினரும் தருணம் பார்த்திருந்தனர். குட்டிமணி கோஷ்டியில் இருந்தே இவர்களின் தனிப்பட்ட காழ்ப்புணர்வு வளர்ந்திருந்தது. சிறிகுழுவினர் பிரபாகரன் குழுவை அழிப்பதற்கான ஆயத்தங்களைச் செய்யத் தொடங்கினர். இவர்களின் ஆயத்தங்கள் முடியும் முன்பு பிரபாகரன் முந்திக் கொண்டார். தமிழ் மக்களும் சில வேளை இசகுபிசகாக கேள்வி கேட்டு விடுவார்கள் என்பதனால் இந்திய கைக்கூலிகள் என்று இந்த தனிப்பட்ட மோதலுக்கு கொள்கை விளக்கம் அளிக்கப்பட்டது.

தேவன்: இவர் பற்றி அதிகம் ஒன்றுமில்லை. குட்டிமணி குழுவிலேயே பிரபாகரனுக்கு வேண்டப்படாதவர். இவரின் கொலைக்குமுன் புலிகள் நாகேசு முனீஸ்வரன் என்னும் கள்வன் ஒருவனுக்கு மரண தண்டனை வழங்கி யாழ் நகரெங்கும் பிரசார சுவரொட்டிகளை ஒட்டி மக்கள் மத்தியில் தண்டனை வழங்குவதற்கான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டனர். சில நாட்களில் அச்சுவரொட்டிக்கு மேலேயே ஒபரோய் தேவனை கொலை செய்ததற்கான காரணம் சமூகவிரோதி என்று கூறப்படும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன.

அடுத்ததாக புளொட் எனப்படும் தமிழீழ மக்கள் விடுதலை இயக்கமான உமா மகேஸ்வரனின் மக்கள் இயக்கம். முற்போக்கு அரசியல் வியாபாரிகளைக் கொண்ட இவ்வியக்கம் ஏதோ வெட்டி வீழ்த்தப் போகிறது என்ற பிரமையை மிகவும் கெட்டிக்காரத்தனமாகக் கொடுத்தது. ஆரம்பத்தில் உட்கொலைகளை புரிவதில் தமிழகத்தில் டெலோ குழுவினரே சாதனை புரிந்தனர். ஆனால் பின்பு உமா மகேஸ்வரன் குழுவினர் அவர்களையும் மிஞ்சினர். சித்திரவதைகளிலும் இவர்கள் சிறந்து விளங்கினர். தமிழீழத் தந்தை செல்வநாயகத்தின் காரோட்டியான வாமதேவன் தூள் கடத்தல் தளபதியானார். இன்று பம்பாயிலேயே தூள் கடத்தல் தொழிலின் ஜாம்பவனாக திகழ்ந்து வருகிறார். செ. கணேசலிங்கன் என்னும் முற்போக்குவாதியும் உமாவின் கொலைகளுக்கு மார்க்சீய விளக்கமளித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களில் குறிப்பிடத்தக்கவர் ஜான், அதிஷ்டவசமாக கொலை செய்யப்பட முன்பு தப்பி தீப்பொறி என்னும் பத்திரிகையை வெளியிட்டு பின்பு காணமல் போனார். இவரது சகாக்களில் பலர் வடபகுதியில் புலிகளால் கொலை செய்யப்பட்டனர். புதிய உலகம் என்னும் இக்குழுவினரது நாவல் இப் போராட்டத்தில் எழுந்த முக்கியமான ஒரு படைப்பு. பலரது மாயையை இது கலைத்தது. தூள் கடத்தல் போன்ற அம்சங்கள் கடைசியில் வேறு நாட்டில் சதி முயற்சியில் இறங்கியவர்கள் பயன்படுத்தும் பயங்கரவாதக் கூட்டமாக மாறி தனது சுயரூபத்தை அம்பலப்படுத்தியது. இன்று இலங்கை அரசுடன் அந்நியோன்னிய உறவுகளைக் கொண்டிருக்கும். இவர்கள் புலிகளுடன் எதற்காக சண்டை பிடிக்கிறார்கள் என்பது புரியவில்லை. கூட்டுச் சேர வேண்டியது தானே. இருவருக்கும் பெரிய வித்தியாசம் இருப்பதாகத் தெரியவில்லை.

செயல்திறன் என்பதைத் தவிர புலிகளுக்கும் டெலோ, டெலா, புளொட் போன்றவற்றிற்கும் எனக்கு வேறுபாடு தெரியவில்லை. கொலை, கொள்ளை, சக இயக்கம் மீதான பொறுமை, மக்களை ஏமாற்றுவது ஆகியன எல்லாமே ஒன்றுதான். புலிகள் கொஞ்சம் திறமையாக செய்கிறார்கள் அவ்வளவு தான். பல நல்ல சக்திகளை உள்வாங்கி அவர்களை அழித்தவர்களும் புளொட் அமைப்பினரே. இப்போராட்டத்தின் முதன்மையான துரோகிகள் புளொட்டின் தலைமையும், சந்ததியாரும்தான்

இனி எமது தமிழ் மக்களின் தனித்தலைமையான பிரபாகரனின் விடுதலைப் புலிகளுக்கு வரலாம். பிரபாகரனும் இவரது பல சகபாடிகளும் கடத்தல் தொழில் அனுபவத்தை உள்வாங்கிக் கொண்டவர்கள். இந்தக் கடத்தல் கும்பல்களால் தான்முதல் முதல் அராஜகம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதை யாரும் மறுக்க முடியாது. பிரபாகரனும் உமா மகேஸ்வரனும் ஒன்றாக இருந்து பிளவுபட்டபோது சுந்தரத்தை பிரபாகரன் கொலை செய்யக் காரணம் இயக்கக் கட்டுப்பாட்டை மீறி பிரிந்து சென்று தனி இயக்கம் அமைத்தது எனக் கூறப்பட்டது. திருமணம் செய்யக் கூடாது என்ற விதி அப்போது இருந்தது. உமா மகேஸ்வரனுக்கும் ஊர்மிளாவுக்கும் தொடர்பு என்று உமா மகேஸ்வரனைக் கொலை செய்வதற்கு வசதியாக வதந்திகள் பிரபாகரனால் பரப்பப்பட்டன. ஆனால் மதிவதனியை கடத்தி வந்து கடிமணம் புரிந்து கொண்டபோது எங்கே போயிற்று அந்த விதி? பல்கலைக்கழக மாணவர் உண்ணாவிரதம் இருந்தால் செத்துப் போய் விடுவார்கள் என்றால் தியாக தீபம் திலீபனையும் கடத்தி வந்திருக்கலாமே. அன்னை பூபதியைக் கடத்தியிருக்கலாமே. அதென்ன பல்கலைக்கழக மாணவர் மீது அப்படி அக்கறை?ஏன் புலிகளால் விஜிதரன் கடத்தப்பட்டபோது அதை எதிர்த்து உண்ணாவிரதமிருந்தவர்களையும் கடத்தியிருக்கலாமே? இந்த மனநோயாளிகள் செய்யும் விடயங்களுக்கான காரணங்களை புரிந்து கொள்ள முயன்றால் நமக்கு பைத்தியமே பிடித்துவிடும். பிரிந்த உமா மகேஸ்வரன் குழுவில் சுந்தரம் முக்கியமானவர். இவரை ஒழித்துக் கட்டியிருக்காவிடில் இன்று புளொட் ஒரு பலமான அமைப்பாக இருந்திருக்கக் கூடும். சுந்தரத்தை ஒழித்தது பிரபாகரனின் முக்கியமான வெற்றிகளில் ஒன்று.

அடுத்ததாக இந்திய அரசுடனான உறவிற்கு வருவோம். இந்திய அரசிடம் இவர்கள் கேட்டது என்னவென்றால் தம்மை மட்டுமே அங்கீகரிக்க வேண்டும், தமக்கு மட்டுமே பயிற்சி தர வேண்டும் என்பதே. ஆனால் இந்திய அரசு இதற்குச் சம்மதிக்கவில்லை. விழுந்தும் மீசையில் மண்படவில்லை என்பது போல் பிறகு இந்திய அரசிடம் பயிற்சி பெறவும் ஆயுதம் வாங்கவும் இவர்கள் பின்னிற்கவில்லை. தமிழீழம் மாகாண சபையாகிய போது தங்களுக்குத் தான் மாகாணசபையின் எல்லாக் கதிரைகளும் வேண்டுமென்றார்கள். இந்திய அரசு மறுத்ததும் ஆக்கிரமிப்பாளனாகி விட்டது. ஈ.என்.எல்.எஃப் எனப்படும் டெலோ, ஈரோஸ், ஈ.பி.ஆர்.எல்.எஃப் கூட்டில் இவர்கள் இருந்தபோது டெலோ, ஈ.பி.ஆர்.எல்.எஃப் ஆகியவற்றின் இந்திய அரசுடனான உறவு பற்றி மூச்சே விடவில்லை. ஏன் அதை அன்று கூடிப்பேசி ஒரு முடிவுக்கு கொண்டு வர முயலவில்லை. ஈ.பி.ஆர்.எல்.எஃப் உம் ஒரு காலத்தில் இவர்களின் நண்பர்கள். தமிழகத்திற்கும் யாழ்ப்பாணத்திற்குமான போக்கு வரத்திற்கு புலிகளின் படகுகள் ஈ.பி.ஆர்.எல்.எஃப் ஆல் பாவிக்கப்பட்டன. தாவடியில் புலிகளின் முகாம் தாக்கப்பட்டபோது டெலோ புலிகளுக்கு உதவி செய்ததற்கு டெலோ தோழர்களுக்கு நன்றி சொல்லி புலிகளால் துண்டுப்பிரசுரம் வெளியிடப்பட்டது. ஒரு எல்லாம் ஒரு காலம்.

புலிகளின் இந்தப் பசி டெலோவின் அழிப்புடன் ருசி கண்டது. புளொட்டின் உட்கட்சி அராஜகமும் பதவிப் போட்டிகளும் ஆயுதமற்ற நிலைமையும் புளொட்டை வெறும் மிரட்டலாலேயே அழிக்கிற நிலைமை ஏற்பட்டது. கிட்டுவுக்கு சவாலாக விளங்கிய சின்ன மெண்டிஸ் குரூரமான முறையில் கிட்டுவால் கொல்லப்பட்டார். ஈ.பி.ஆர்.எல்.எஃப்க்கு தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் பெருகி வந்த ஆதரவும் ஈ.பி.ஆர்.எல்.எஃப் புலிகளை அம்பலப்படுத்தி மக்கள் மத்தியில் விமர்சிக்கத் தொடங்கியதும் இவர்கள் பற்றிய பயத்தை புலிகளுக்குக் கொடுத்தது. ஈ.பி.ஆர்.எல்.எஃப் ஐ அழிப்பதற்கு திட்டம் தீடடப்பபடடது. விஜிதரன் பிரச்சனையில் புலிகள் விஜிதரனை கொலை செய்ததை ஈ.பி.ஆர்.எல்.எஃப் அம்பலப்படுத்தி பல ஊர்வலங்கள் செய்தது. பல ஊர்வலங்கள் பல இடங்களில் புலிகளின் குண்டர்களால் தாக்கப்பட்டது. விஜிதரன் பிரச்சனை தொடர்பாக கிட்டுவைச் சந்திக்கச் சென்ற பல்கலைக்கழக செயல்பாட்டுக் குழுவிடம் இன்னும் மூன்று மாதங்களில் ஈ.பி.ஆர்.எல்.எஃப் அழிக்கப்படும் என கிட்டு அறிவித்தார். ஆனால் ஈ.பி.ஆர்.எல்.எஃப் மேதாவிகள் அதை சீரியசாக எடுக்கவில்லை. விளைவு அடிவாங்கி ஓடி ஒளித்து இந்திய அரசிடமும் இலங்கை அரசிடமும் சரணடைய வேண்டிய நிலைமைக்கு ஆளானார்கள்.

எத்தனையோ ஆயிரக்கணக்கான இளைஞர்கள் புலிகளால் கொல்லப்பட்டுள்ளனர். சிறிலங்கா அரசினால் கொலை செய்யப்பட்ட இயக்க உறுப்பினர்களின் தொகையை விட புலிகளால் கொலை செய்யப்பட்ட தொகை ஆயிரக்கணக்கில் அதிகமானதாகும். மனித உரிமைகள் பற்றி பேசிய ராஜினி திரணகம புலிகளால் படுகொலை செய்யப்பட்டார். அந்த அளவிற்கு கருத்துச் சுதந்திரத்திற்கு மதிப்பு கொடுப்பவர்கள் புலிகள்.

வெறுமனே இராணுவத் தாக்குதல்களை வெற்றிகரமாகச் செய்வதனாலோ யாரும் அரசியல் இலட்சியம் உடையவர்கள் என்று இல்லை. இது தான் போராட்டம் என்றால் போராட்டத்திற்கே புது இலக்கணம் ஒன்றை உலகிற்கு படிப்பித்திருக்கிறார்கள். இராணுவத் தாக்குதல்கள் மக்கள் மத்தியில் இவர்கள் பற்றிய மாயை இருக்கும். கோஷ்டி மோதலில் டெலோ, புளொட் போன்ற இயக்கங்களை புலிகள் வென்றதால் புளொட், டெலோ போன்ற இயக்கங்களை விமர்சிக்க முடிந்தது. இவர்கள் பற்றிய மாயை உடைந்தது. 84 தைப்பொங்கலில் தமிழீழம் என்று டெலோ சொன்னபோது தமிழ் மக்கள் நம்பினார்கள். எம்.ஜி.ஆரும் கருணாநிதியும் தமிழகத்தில் தலைவர்களாக இருக்கும்போது இவர்கள் இங்கு தலைவர்களாக இருப்பதில் ஆச்சரியமில்லை. எம்.ஜி. ஆரைப் பற்றி கருணாநிதியைப் பற்றி ஒரு சாதாரண மனிதன் விமர்சித்தால் அவன் சாதாரணமாகக் கொலை செய்யப்படுவான். இரத்தத்தின் இரத்தங்களும் கழகக் கண்மணிகளும் தமது தலைவர்கள் பற்றிய உண்மை யாராவது கூறினால் நம்பப் போவதில்லை. அவனை ஒழிக்கவே முற்படுவார்கள். அதுபோல் தான் வடகிழக்கிலும் மேற்கண்ட இவரது செயல்களுக்கும் ஒரு சுதந்திரப் போராட்டத்திற்கும் என்ன சம்பந்தமிருக்கிறது. தமிழனையே தமிழன் கொல்வதா தமிழீழப் போராட்டம். இவர்கள் போராளிகளா? கிரிமினல் குற்றவாளிகளா? சிந்தியுங்கள். ஒரு இனத்தின் தலைமை அவ் வினத்தின் மக்களை எவ்வாறு மதிக்கிறது என்பதை வைத்தே சிலவற்றை முடிவு செய்யலாம். சிங்கள மக்களின் இராணுவம் தானே ஈவிரக்கமின்றி நம் கண்காண ஆயிரக்கணக்கான இளைஞர்கள் கொல்லப்பட்டனர். புலிகள் தமிழனைக் கொல்லுகிறார்கள் அவர்கள் சிங்களவனைக் கொல்லுகிறார்கள். இருவருக்கும் வித்தியாசம் மொழி ஒன்று மட்டுமே. சிங்கள இராணுவம் கூட சிங்களவனை காப்பாற்றத் தானே புலிகளுடன் போரிடுகிறது என பிரச்சாரம் செய்யப் படுகிறது. ( அது போலவே புலிகளும்) கடைசியில் நடப்பது என்ன? ஒரு தேசிய விடுதலைப் போராட்டம் இப்படித் தான் நடக்க வேண்டுமா? சிங்கள அரசுடன் மற்றைய இயக்கங்கள் சேர்ந்து தமது ஆதரவாளர்களை கொழும்பில் வேட்டையாடுவதாக புலம்பித் திரிகிறார்கள் ஆனால் பிரேமதாசாவுடன் கூட்டு இருந்த போது கொழும்பில் தமி ழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டால் N.I.B எனப்படும் சிங்கள அரசின் உளவுப்படையுடன் பொலீஸ் நிலையத்திற்குள்ளேயே வந்து ஈ.பீயா புளொட்டா என்று பார்க்கிற அளவிற்கு எட்டப்பனாக இருந்தவர்கள் புலிகள். அந்நேரத்தில் பலர் இவர்களால் கொலை செய்யப்பட்டனர். சிங்கள இராணுவத்துடன் சேர்ந்து மட்டக்களப்பில் ரோந்து செய்தால் அதை யாரும் கண்டு கொள்ளக் கூடாது. மற்ற இயக்கம் சேர்ந்தால் மட்டும் கைக்கூலிகள். தம்மையும் அப்பெயரால் அழைக்கலாம் என்பதை மறந்து விட்டார்களா?

(புலிகளைப் பற்றி இன்னும் வரும்)



நயகம் (05.04.90)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்